## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.85/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கருணாகரன் | மதம் | : இந்து |
| த/பெ | : கனகராஜ் | ஜாதி | : -- |
| வயது | : 70 | கிராமம் | : காவனூர் |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : அரக்கோணம் |

**19.03.2025**

**பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 2ம் பிரதிவாதி தேவியை திருமணம் செய்வதற்கு முன்பு அவர்கள் குடும்பமும் எங்கள் குடும்பமும் உறவினர்களா என்றால் இல்லை. எனது பெற்றோர் குடும்பமும் என் மனைவி குடும்பமும் உறவினர்கள் இல்லாத நிலையில் **"என் மாமனார் என் திருமணத்திற்கு முன்பு இருந்தே தாவா சொத்தை ஆண்டு அனுபவித்து வருகிறார்"** என பிரமாண வாக்குமூலம் பத்தி 2ல் எந்த அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் என் திருமணத்திற்கு முன்பு நான் பெண் பார்க்க சென்ற போதே என் மாமனார்தான் அந்த சொத்தில் அறுவடை செய்து வந்தார். எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் 1986ல் திருமணம் ஆனது என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. தாவா சொத்து அரசன் என்பவருக்குதான் சொந்தம் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றாலும் எனது எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து தோட்டி சாமய்யா என்ற வடக்கையாவிற்கு சொந்தம் என சொல்லியுள்ளதில் எது உண்மை என்றால் வழக்கு சொத்து அரசன் அனுபவத்தில்தான் இருந்தது. தோட்டி சாமய்யாவிடம் இல்லை. தோட்டி சாமய்யாவிற்கு இல்லை என்றும் அரசன் அனுபவத்தில் இருந்ததாக நான் சொல்வதில் என் மனைவி வழக்கு சொத்து தோட்டி சாமய்யாவிற்குதான் பாத்தியம் என சாட்சியம் அளித்துள்ளதில் இரண்டில் எது உண்மை

என்றால் நான் சொல்வதுதான் உண்மை. தோட்டி சாமய்யாவிற்கு இல்லை. என் மனைவி அவ்வாறு சொல்லியிருக்க மாட்டார்.

3. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து தோட்டி சாமய்யா என்ற வடக்கையாவிற்கு சொந்தம் என சொல்லியுள்ளது சரியா என்றால் நான் வழக்கு சொத்து தோட்டி சாமய்யா என்ற வடக்கையாவிற்கு சொந்தம் என நான் வழக்கில் சொல்லவில்லை. என் மாமனார் வழக்கு சொத்தை எனது திருமணத்திற்கு முன்பிருந்தே அனுபவித்து வருகிறார் என்பதை காட்ட பட்டாவை தவிர அடங்கல் உள்ளிட்ட வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் 1962ல் இருந்து 2000 வரை வரி உள்ளது. 1950ல் பதிவு செய்த அடமானம் வைத்துள்ளார். எனது பிரமாண வாக்குமூலத்தில் 1961 முதல் 2000 வரை வரி செலுத்தியதாகவும் தற்போது 1962ல் இருந்து 2000 வரை வரி செலுத்தியதாகவும் கூறியுள்ளதில் 2ல் எது சரி என்றால் 1962ல் இருந்து 2000 வரை வரி செலுத்தியுள்ளார்.

4. எனது பிரமாண வாக்குமூலத்தில் 1974ல் பட்டா என் மாமனார் பெயருக்கு கொடுக்கப்பட்டதாக நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எதிர்வழக்குரையில் அவ்வாறு எந்த விவரமும் சொல்லவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1974ல் வருவாய்துறையினர் பட்டா கொடுத்ததாக சொல்வதில் பட்டாவை வட்டாட்சியர் கொடுத்தாரா, வருவார் கோட்டாட்சியர் கொடுத்தாரா என்றால் எனக்கு 1986ல்தான் திருமணம் ஆனது. 1974ம் வருட பட்டா பாஸ்புக்கை நான் பார்த்துள்ளேன். பட்டாவை வட்டாட்சியர் கொடுத்தாரா, வருவார் கோட்டாட்சியர் கொடுத்தாரா என்று தெரியவில்லை.

5. நான் எனது எதிர்வழக்குரையில் பட்டா பற்றிய விவரத்தை சொல்லவில்லை என்றாலும் தற்போது பிரமாண வாக்குமூலத்தில்தான் பட்டா பற்றிய விவரத்தை சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. 1962ல் இருந்து 2000 வரை செலுத்தப்பட்ட வரி யார் பெயரில் உள்ளது என்றால் அரசன் பெயரில்தான் உள்ளது. எனது எதிர்வழக்குரையில் வரி செலுத்தப்பட்ட விவரம் பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அரசன் பெயரில்தான் வரி செலுத்தப்பட்டது என நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். அரசன், அவரது மகள் தேவி, மனைவி கிளியம்மாள் என மூவர் பெயரிலும் வரி உள்ளது.

6. அரசன், அவரது மகள் தேவி, மனைவி கிளியம்மாள் என மூவர் பெயரிலும் உள்ள வரி ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நாங்கள் எந்த வரியும் செலுத்தவில்லை என்றாலும் பசலி மட்டும்தான் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. யார் பெயரில் வரி உள்ளது என்றால் அரசன், அவரது மகள் தேவி, மனைவி கிளியம்மாள் என மூவர் பெயரிலும் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 11 முதல் 17 வரையிலான வரி ரசீதுகளை யார் தமிழாக்கம் செய்தது என்றால் ஓய்வு பெற்ற அரசு அங்கீகாரம் பெற்ற கிராம நிர்வாக அலுவலர்தான் அவ்வாறு தெலுங்கில் இருந்த மொழிமாற்றம் செய்து கொடுத்தார்.

7. அவ்வாறு தெலுங்கில் இருந்து தமிழ் மொழிமாற்றம் செய்த நபரின் பெயரோ முத்திரையோ மேற்படி ஆவணங்களில் இல்லை என்றால் சரியல்ல. உள்ளது. மேற்படி வரி ரசீதுகள் போலியானது என்றாலும் நான் வழக்கிற்காக வேண்டி போலியாக தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது மாமனாருக்கு விவசாய பணியில் உதவி செய்ததாக நான் கூறியுள்ள விவரத்தை நான் எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். என் மாமனார் விவசாயம் செய்த நிலத்தில் மின் இணைப்பு எண் உள்ளதா என்றால் மின் இணைப்பு இல்லை. வழக்கு சொத்தில் உள்ள கிணற்றில் ஏற்றம் மூலம் தண்ணீர் எடுத்து நெற்பயிர் செய்தோம்.

8. என் மாமனார் இறந்த பின்பு கிணற்றில் நீர் இல்லாததால் வேலிக்காத்தான் மரத்தை வெட்டி அனுபவிப்பதாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் அவ்வாறு எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான்சொல்வது போல் முள்செடியோ, வேலிக்காத்தான் மரமோ இல்லை என்றால் வேலிக்காத்தான் மரம் உள்ளது. வாதியின் வீடு கழனிக்கு பக்கத்தில் உள்ள 2 வது தெருவில் உள்ளது. நான் எனது எதிர்வழக்குரையில் 2 வது தெருவில் வாதியின் வீடு உள்ளது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் வழக்கிற்கு பின்புதான் எனக்கு நிலம் அவர்கள் வாங்கிய விவரம் தெரியும்.

9. வழக்கு சொத்தில் வாதியின் வீடு இல்லை வேலிக்காத்தான் மரம் தான் உள்ளது என்ற விவரத்தை நான் ஏன் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் வழக்கு சொத்தில் வாதியின் வீடு இல்லை வேலிக்காத்தான் மரம் மட்டும் இருந்திருந்தால் நான் ஏன் நீதிமன்றத்தில்

இருந்து ஆணையர் நியமித்து வழக்கு சொத்தை அளக்கவில்லை என்றால் தேவைப்பட்டால் செய்வேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வழக்கு சொத்தில் வாதியின் வீடு இல்லை வேலிக்காத்தான் மரம் மட்டும் இருந்திருந்தால் நான் நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் நியமித்து வழக்கு சொத்தை அளந்து காண்பித்து இருப்பேன் என்றாலும் சரியல்ல.

10. 1989 ல் என் மாமனார் என்ன பரிகாரம் கேட்டு யார் யார் மீது எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் துரை, ஆதிமூலம், ஜெயபால் ஆகியோர்கள் தகராறு செய்ததால் பேசி பார்த்து சமாதானம் ஆகாததால் வழக்கு தாக்கல் செய்தார். என்ன பரிகாரம் கேட்டிருந்தார் என்றால் அவர்களுக்கு பாகம் எப்போதோ கொடுக்கப்பட்டுவிட்டது என்றும் அவர்களுக்கு பாகமே இல்லை என்றும் வழக்கு தாக்கல் செய்தார். புல எண்.138/6 ல் 57 செண்ட்க்கு அரசனுக்கு உரிமையில்லை என்று தெரிந்துதான் 23 செண்ட்க்கு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் 57 செண்ட்க்குதான் வழக்கு தாக்கல் செய்தார்.

11. அரசன் 57 செண்ட்க்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் தோட்டி சாமய்யா என்ற வடக்கையாவின் மற்ற வாரிசுகளுக்கும் பங்கு உள்ள நிலையில் அரசனுக்கு 19 செண்ட்தான் பாத்தியம் என்றாலும் அவர் அந்த விவரம் தெரியாமல் 23 செண்ட்க்கு பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்றாலும் சரியல்ல. அ.வ.எண்.616/1989 வழக்கை அரசன் தாக்கல் செய்யும்போது பெரியப்பன் மற்றும் ஆறுமுகம் தாவா சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றால் பெரியப்பன் மற்றும் ஆறுமுகம் தாவா சொத்தை கிரையம் வாங்கிய விவரம் இந்த வழக்கிற்கு பிறகு 2018 ல்தான் தெரியும். மேற்படி வழக்கு காலக்கட்டத்தில் பெரியப்பன் மற்றும் ஆறுமுகம் தாவா சொத்தை கிரையம் வாங்கவில்லை என்பதால்தான் அவர்கள் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் என் மாமனார் துரை, ஆதிமூலம், ஜெயபால் ஆகியோர்கள் மீதுதான் வழக்கு தாக்கல் செய்தார். பெரியப்பன், ஆறுமுகம் மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை.

12. ஆறுமுகம் மற்றும் பெரியப்பன் ஆகியோருக்கு கிரையம் கொடுத்த சித்திரையின் வாரிசுகளுக்கும் உரிமையிருப்பதால்தான் அரசன் உயிருடன் இருக்கும்போது கிரைய ஆவணத்தை ரத்து செய்ய எந்த நடவடிக்கையும்

எடுக்கவில்லை என்றால் துரை, ஆதிமூலம், ஜெயபால் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆறுமுகம், பெரியப்பன் கிரையம் பெற்ற ஆவணத்தை ரத்து செய்ய ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் அவர்கள் கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது என்பதால் நாங்கள் வழக்குதாக்கல் செய்யவில்லை. அவர்கள் வழக்கு தாக்கல் செய்த பின்புதான் எங்களுக்கு அவர்கள் கிரையம் வாங்கிய விவரம் தெரியும்.

13. ஆறுமுகம் மற்றும் பெரியப்பன் 1991ல் கிரையம் வாங்கிய ஆவணம் செல்லத்தக்கது என்பதால் வாதிகள் கோரியப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)